

நாகப்பட்டினம் நான்காவது புத்தக திருவிழா தொடக்க விழா நாகை அரசினர் தொழிற்பயிற்சிநிலைய (ஐ.வு.ஐ) வளாகத்தில் நடைபெற்றது. அரங்கத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன. நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ்,. தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவரும் நாகை மாவட்டக் கழகச் செயலாளருமான என்.கௌதமன், நாகை சட்டமன்ற உறுப்பினர்முகம்மது ஷா நவாஸ், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், எலுமிச்சன அள்ளி ஊராட்சி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் வட்டாட்சியர் ஜெ.சுகுமார்,மனோகரன்,ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் கோபால்,கண்ணபெருமாள், பாலக்கோடு டி.எஸ்.பி.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தனர்.உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சர்வோத்தமன்,தனலட்சுமி, பாலக்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டி.எம்.அரியப்பன், ஏவி.குமார்,தனக்கோடி,சுரேஷ் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மக்கள் ஆதரவு பெருகி வருவதால் – சட்டமன்றத் தேர்தலில்

# இலக்கை விட அதிக அளவில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும்!

## கரூரில் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர்.ஆக.3.

மக்கள் ஆதரவு பெருகி வருவதால், சட்டமன்றத் தேர்தலில் இலக்கை விட அதிக அளவில் திமுக கூட்டணி வெற்றி பெறும். இதை தெரிந்து கொண்டு வீட்டில் முடங்கி கிடந்தால் மக்கள் மீண்டும் புறக்கணித்து விடுவார்கள் என பயந்து 10 தோல்விகளை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் ஏதேதோ கூறி வருகிறார் என கரூரில் வி. செந்தில் பாலாஜி கூறினார்.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம் வாங்கல், கரூர் வட்டம் ஆண்டாங்கோவில் புதூர் பகுதிகளுக்கு தனியார் திருமண மண்டபங்களில் நடைபெற்றது. 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நிகழ்ச்சிகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். 37 பயனாளிகளுக்கு ரூ. 12.35 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டத்திலுள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகாமையிலேயே சென்று வழங்கும் வகையில் இம்முகாம்கள் நடைபெற்று வருகிறது. "உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். கரூர் மாவட்டத்தில் 29.07.2025 வரை நடைபெற்ற முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் 15,775 கோரிக்கை மனுக்களும் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக 9,845 விண்ணப்பங்கள் என மொத்தம் 25.620 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. விரைவில் தீர்வு காணப்படும்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தி.மு.க. ஆட்சி தான் அமையும். தளபதி அவர்கள் தான் முதல்வராக மீண்டும் பொறுப்பேற்க இருக்கிறார்கள். மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டே வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் தாண்டி திமுக கூட்டணி இமாலய வெற்றி பெறும். மக்களின் மனநிலையை நீங்கள் பார்க்க வேண்டும்.

வீடு வாரியாக சென்று நாங்கள் உறுப்பினர்கள் சேர்ப்பு நடத்துகிறோம். எந்த இடத்திலும் மக்கள் அரசை பற்றி எதுவும் கூறவில்லை. பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற்றிருக்கிறோம். மீண்டும் இந்த உதவிகள் வேண்டும் என்று கேட்டு ஆதரவு தான் தெரிவித்து வருகின்றனர்.

தொடர்ந்து 10 தேர்தலில் தோல்வியை தழுவி மக்களால் புறக்கணிக்கப்பட்டு முடங்கி கிடந்தவர் தேர்தல் வருவதால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மீண்டும் புறக்கணித்து விடுவார்கள் என்பதால் வெளியே வந்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளையும் சேர்த்து 57 விழுக்காடு புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். கரூர் சட்டமன்ற தொகுதியில் 69 விழுக்காடு புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இதெல்லாம் யாரும் போய் கட்டாயப்படுத்தி சேர்க்க முடியுமா?. எந்த அளவுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதற்காக இதைச் சொல்கின்றேன். எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாக்களித்த மக்களுக்காக அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். ஆனால் நமக்கு நாமே திட்டத்தில் பொது மக்களிடமிருந்து பணத்தை வசூல் செய்து தனது சொந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் எடுத்து கடந்த காலத்தில் பணி செய்துள்ளனர். மக்கள் எதற்கு வாக்களிக்கிறார்கள்?. நமக்கு நாமே திட்டத்தை தனக்கு தானே என்று பயன்படுத்திக் கொள்வதற்காகவா?. சொந்த கம்பெனிக்கு டெண்டர் கொடுக்கவா?. அதனால் தான் கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் புறக்கணித்து வீட்டுக்கு அனுப்பினார்கள். மக்களால் புறக்கணிக்கப்பட்ட வர்கள் இப்படி எதையாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள்.

கரூரில் பொது இடங்களில் உள்ள மரக்கன்றுகளுக்கு அதிமுக சார்பில் தண்ணீர் ஊற்றிய லாரியை காவல்துறையினர் தடுத்து விட்டனர் என அவதூறு பரப்பி வருகின்றனர். அந்தத் துறையில் இருந்தவருக்கு விதிமுறைகள் தெரியாதா?. இதற்கு அனுமதி பெற வேண்டும். வாகனத்தை உரிய முறையில் பராமரிக்க வேண்டும். ஓட்டுநருக்கு உரிமம் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அரசு துறையில் அனுமதி பெற்று செய்ய வேண்டும். மாறாக விளம்பரத்திற்காக போக்குவரத்து இடையூறாக வாகனத்தை நிறுத்தி இருந்தனர். தண்ணீர் ஊற்றிய லாரிக்கு இன்சூரன்ஸ் இல்லை. டிரைவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. வண்டி ஒருவர் பெயர் உள்ளது, டேங்கர் ஒருவர் பெயரில் உள்ளதாக அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். தங்களது இயலாமையை மறைக்க, இருப்பைக் காட்டிக்கொள்ள இப்படி எதையாவது சொல்லிக் கொண்டிருக்கின்றனர்

இவ்வாறு அவர் கூறினார்.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக மாமன்ற கூட்டரங்கில், மாமன்ற கூட்டம் மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மண்டலத் தலைவர்கள் சி.கோவிந்தசாமி, தம்பி ஆர். கோவிந்தராஜ், வெ.உமா மகேஸ்வரி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளில் நிறுவப்பட்ட மொத்த

# ஐ.டி.மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3-

மக்களவையில் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளில் நிறுவப்பட்ட மொத்த ஐ.டி. மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்வி வருமாறு:

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் நிறுவப்பட்ட மொத்த ஐடி மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அதே காலகட்டத்தில் தமிழ்நாடு மாநிலத்தில் அமைக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை என்ன? தர்மபுரி மக்களவைத் தொகுதியிலோ அல்லது அதைச் சுற்றியோ அத்தகைய உற்பத்தி அலகுகள் ஏதேனும் நிறுவப்பட்டுள்ளனவா?, முன்மொழியப் பட்டுள்ளனவா? அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா? அப்படி இருப்பின்,அதன் இடம், முதலீட்டு அளவு, உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி திறன் உள்ளிட்ட விவரங்கள் என்ன? தர்மபுரி மாவட்டத்



தில் மின்னணு வியல்/ஐடி மென்பொருள் அலகுகளை நிறுவுவதற்கான சாத்தியக் கூறு ஆய்வுகள் அல்லது தள மதிப்பீடுகளை இதுவரை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா அல்லது மேற்கொள்ள முன்மொழிந்துள்ளதா?தமிழ்நாட்டில் தர்மபுரி போன்ற அடுக்கு2 மற்றும் அடுக்கு3 மாவட்டங்களில் மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகளின் சமச்சீர் பிராந்திய விநியோகத்தை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன ?

இவ்வாறு தருமபுரி ஆ.மணி மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ஜிதன் பிரசாதிடம் கேள்வி எழுப்பினார்.

### ஈரோடு – திருப்பூர் – நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில்

# ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கிகள் எவ்வளவு?

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.3-

மக்களவையில் ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விகளும் ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:-

(அ) ஒரே தரத்தில் ஓய்வூதியம் (OROP) திட்டம் தற்போது எவ்வாறு நடைமுறையில் இருக்கிறது? இதுவரை எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(ஆ) ஓய்வூதியம் காலதாமதமின்றி வழங்குவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH இணையதளத்தில் எவ்விதமான தொழில்நுட்ப / நிர்வாக மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(இ) தமிழ்நாட்டின் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய ஓய்வூதிய பாக்கிகள் எவ்வளவு உள்ளது என்பதைத் தெரிவிக்கவும்.

ஒன்றிய அரசின் பதில் வருமாறு:-

(அ) பாதுகாப்புப் படைகளின் ஓய்வூதியத் தொகை 01.07.2014 முதல் One Rank One Pension (OROP) திட்டத்தின் கீழ் ஐந்தாண்டு ஒருமுறை திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதன் அடிப்படை யில், இரண்டா



வது மற்றும் மூன்றாவது ஓய்வூதியத் திருத்தங்கள் 01.07.2019 மற்றும் 01.07.2024 ஆகிய தேதிகளில் அமல்படுத்தப்பட்டு உள்ளன. OROPI மற்றும் OROPII திட்டங்களின் அடிப்படையில் நிலுவையில் இருந்த தொகைகள் தகுதியுடைய பாதுகாப்புப் படை ஓய்வுபெற்றவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. OROPIII திட்டத்தின் கீழ், திருத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையும் அதற்கான நிலுவைத் தொகையும் 25.20 லட்சம் தகுதியான ஓய்வுபெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் செய்யப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிர்வாக முன்னேற்ற ங்கள் விவரங்கள் பின்வருமாறு:

(i) SPARSH (System for Pension Administration - Raksha) என்பது ஒன்றிய அரசின் Digital India திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது அக்டோபர் 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் பாதுகாப்பு படை மற்றும் பாதுகாப்பு துறை சிவிலியன்களுக்கான ஓய்வூதியங்களை அனுமதிப்பதும் நேரடியாக அவர்களது வங்கி கணக்குகளுக்கு செலுத்துவதும் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது. இது ஓய்வூதிய நிர்வாகத்தை முழுமையாகவும். வெளிப்படையாகவும், சுலபமாகவும் செய்து தரும் ஒரு அமைப்பாக செயல்படுகிறது.

(ii) தற்போது, 31 லட்சத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படை ஓய்வுபெற்றவர்கள் (சேவை உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய சிவிலியன்கள் உட்பட) SPARSH போர்டலில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஓய்வூதியத் தொகைகள் SPARSH மூலம் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகின்றன.

(iii) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் உருவாக்கப்பட்ட முக்கியமான வசதிகள் பின் வருமாறு:

(அ) Reservist Pension

(ஆ) Invalid Pension

(இ) Prorata Pension for PBOR

(ஈ) LTA (Life Time Arrears)

(உ) Fixed Medical Allowance (FMA) updation

(ஊ) IT saving for Jeevan Raksha Padak

(எ) Integration with TRACES for Form16

(iv) நேபாளத்தை பூர்வீகமாகக் கொண்ட Gorkha (NDG) ஓய்வுபெற்றவர்கள் இப்போது SPARSH வாயிலாக ஓய்வூதியம் பெற முடியும். இவர்கள் தற்போது Nepal SBI Bank மற்றும் Everest Bank Ltd. வாயிலாக ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். NDG மற்றும் NRI ஓய்வுபெற்றவர்களுக்கு உதவ SPARSH சேவையை விரிவுபடுத்தும் நோக்கில், ஒரு தனிப்பட்ட Email ID உருவாக்கப்பட்டுள்ளது.

(v) SPARSH போர்டலில் செய்யப்பட்ட முக்கிய தொழில்நுட்ப மேம்பாடுகள்,

இணைப்பு வேகம் 256 MBPS ஆக அதிகரிக்கப்பட்டு, சேமிப்பு வசதி 600 GBயிலிருந்து 200 TB ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், Mobile Applicationயும் மேம்படுத்தப்பட்டுள்ளது.


(இ) தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மாவட்டங்களில் வசிக்கும் ஓய்வு பெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவைத் தொகை தொடர்பான தனியான தரவுகள் இல்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை கா. கிட்டு

### ஆகஸ்ட் 3 (2011)



இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# நாவலர் நெடுஞ்செழியன் புதல்வர் மதிவாணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3-

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் (வயது 65) உடல்நலக் குறைவினால் மறைவெய்தினார். அவரது மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மதிவாணன் அவர்கள் கடந்த சில நாட்களாக உடல் நலமில்லாமல் இருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் மறைவெய்தினார்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் புதல்வர் மதிவாணன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். மறைந்த அன்னாரது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று மரக்காணத்தில் நடைபெற்றது.



கிருஷ்ணகிரி மேற்கு &கிழக்கு மாவட்டத்தில், 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கைகான அலுவலகத்தை 'Firewall' உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி திறந்து வைத்து பணிகளை பார்வையிட்டார். கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , ஓசூர் மாநகர மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவை தலைவர்கள் யுவராஜ் , நாகராஜ் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர்கள் சுரேஷ் ,இசை, மாநகர துணை மேயர் ஆனந்தையா மற்றும் கழக நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.